லங்கா லேலண்ட் (சொந்த) லிமிடட்

31 மார்ச் 2016 முடிவடைந்த ஆண்டுக்கான

நிதி அறிக்கைகள்

பணிப்பாளர்களின் அறிக்கை

பணிப்பாளர்களால் இவ் அறிக்கையானது ஆண்டு பொது கூட்டத்துக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் அறிக்கை

பணிப்பாளர் சபையானது இவ் அறிக்கயை 31 மார்ச் 2016 முடிவடைந்த ஆண்டுக்கான நிதி அறிக்கைகளுடன் சமர்ப்பிக்கிறது.

கம்பனி நடவடிக்கைகள்

கம்பனியின் பிரதான நடவடிக்கை அது பிரதானமாக மூலதனமிட்டுள்ள அசோக் லேய்லன் நிறுவனத்தினை கண்காணிப்பதும் வழிநடத்துவதும் ஆகும்.

ஆண்டுக்கான ஆய்வு

	31/3/2016 ரூ
வருமானம்	
வட்டி வருமானம்	3,883,244.00
(-) செலவீனங்கள்	
நிலய நிர்வாக செலவீனம்	(3,045,107.16)
இணைக்கப்பட்ட கம்பனி சந்தை மதிப்பு (மிகை/குறை)	322,767,500.00
ஏனைய செலவீனங்கள்	(4,231.96)
தொழிற்படு இலாபம்/நட்டம்	323,601,404.88
நிதி வருமானம்	54,450,000.00
வரிக்கு முன் இலாபம்	378,051,404.88
வரி	(1,087,308.00)
ஏனைய பூரண வருமானம்	-
ஆண்டிற்கான மொத்த பூரண வருமானம்	376,964,096.88

பணிப்பாளர்கள்

திரு எம் எஸ் மீராசாக்ஹிப்	தலைவர்
திரு எஸ் ஆனந்தராசா	பணிப்பாளர்
திரு பீ எம் கே ஹெட்டியாராச்சி	பணிப்பாளர்
திரு ஜஸ்ரி ஜவப்தீன்	பணிப்பாளர்
திரு எ எம் ஜஹன்சர்	பணிப்பாளர்
திரு கே டீ எ ச அர்சகுலரத்ன	பணிப்பாளர்

பங்குலாபம்

செலுத்தப்பட்டதை பணிப்பாளர் சபை மகிழ்ச்சியுடன் அறிய தருகிறது.

பணிப்பாளர்களுக்கு கம்பனி ஒப்பந்ததில் உள்ள அக்கறை நிதியறிக்கையின் குறிப்பு 17 இில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

கணக்காய்வாளர்கள்

இந் நிதியறிக்கைகள் Krestom MNS & Co பட்டய கணக்காளர்களால் கணக்காய்வு செய்யபட்டுள்ளதுடன் அவர்கள் மீள் நியமனத்துக்கு அனுமதி அளித்துள்ளனர்

நன்றி உரையுடன் கூட்டம் நிறைவடைகிறது.

தலைவர்

பணிப்பாளர் சபை அனுமதியுடன்.

சுயாதீன கணக்காய்வாளர் அறிக்கை

Lanka Leyland (Pvt) Limitted

பங்குதாரர்களுக்கு நிதிக்கூற்றுக்கள் தொடர்பான அறிக்கை

Lanka Leyland limited *கம்பனியின் 31- மார்ச் 2016 இல் உள்ளவாறான ஐந்தொகை,*
அத்தினதில் முடிவடைந்த ஆண்டுக்கன வருமானக்கூற்று, காசுப்பாச்சல்கூற்று, முக்கியமான கணக்கியல் கொள்கையின் சுருக்கம், பக்கம் 3-14 வரை காட்டப்பட்டுள்ள விளக்கக்குரிப்புகள் எம்மால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளன.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கலுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாக சமர்ப்பித்தல் ஆகியன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிழையான கூற்றுக்கள் அற்ற நிதி அறிக்கைகளை தயாரிப்பதும் சமர்ப்பிப்பதும், உள்ளக கட்டுப்பாடுகளை திட்டமிடல், செயற்படுத்தல் மாற்றும் நடத்திச்செல்லல், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளை தெரிவு செய்தலும் பிரயோகித்தலும் பொருத்தமான முறையில் கணக்கீட்டு மதிப்பீடுகளை தயாரித்தலும் இப்பொறுப்புக்குள் உள்ளடங்குகின்றன்.

கணக்காய்வின் நோக்க எல்லையும் அபிப்பிராயத்துக்கான அடிப்படையும்

எமது பொறுப்பானது இக்கணக்கு அறிக்கைகள் தொடர்பான அபிப்பிராயத்தை எமது கணக்காய்வின் *மூலம் வெளிப்படுத்துவது ஆகும். எம்மால் கணக்காய்வானது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு* அமைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக்கணக்கீட்டு நியமங்களின் தேவைப்பாடானது நாம் இந் நிதிக்கூற்றுக்களை திட்டமிட்டு கணக்காய்வு செய்து அவை பொருண்மையான பிழையான கூற்றுக்கள் அற்றவை என்பதை நியாயமாக உறுதி செய்வது ஆகும்.

கணக்காய்வானது மாதிரி அடிப்படையில் நிதி அறிக்கைகளில் உள்ள தொகைகள் மற்றும் வெளிப்படுத்தல்களுக்கான ஆதரங்களை பரிசோதிப்பது ஆகும்.மேலும் கணக்காய்வானது கணக்கியலுக்கான அடிப்படை தத்துவங்கள் மற்றும் ஏனைய நிதி அறிக்கையின் வெளிப்படுத்தல்களை, *ஏனைய முக்கிய மதிப்பீடுகள் போன்ற முகாமைத்துவத்தால் பயன்படுத்தப்பட்ட விடையங்களை ஆராய்வதாகும்.*

எமது உயர் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் அமைய கணக்காய்வு நடவடிக்கைகளுக்குத் தேவையான போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்கள் பெறப்பட்டன என்றும் அதற்கமைய எமது அபிப்பிராயத்திற்கான போதிய அளவு அடிப்படை எமது கணக்காய்வின் மூலம் வழங்கப்பட்டது எனவும் நாம் நம்புகின்றோம்.

தகுதியான அபிப்பிராயதுக்கான அடிப்படை

வட்டி வருமானம் ரூ- 3,883,244/-

நிறுவனம் காசு அடிப்படையில் வட்டி வருமானத்தினை அடையாலளப்படுத்தியுல்லது. சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமம் பிரிவு 23, 29 இற்கு அமைவாக வட்டிவருமானமானது வினைத்திரனான முறையைப்பயன்படுத்தி அடையாளம் காணப்பட வேண்டும். வட்டி வருமானமானது உழைக்கப்பட்டவுடன் அடயாலம் காணுவதற்கு பதிலாக காசு அடிப்படையில் காணப்பட்டுள்ளது இதன் காரணமாக நிறுவனத்தின் வருடத்திற்கான வட்டி வருமானம் மற்றும் இலாபம் ஆகியன 216,385.21 /- ரூபாவால் குறைத்துக்காட்டப்பட்டுள்ளது.

இதன்மூலம் இது வருமானத்தை அடையாலம் கண்டுகொள்வதற்கான SLFRS பிரிவு 23 உடன் உடன்படவில்லை.

அபிப்பிராயம்

எமது அபிப்பிராயத்தில் ,தகுதியான அபிப்பிராயம் ஒன்றுக்கான விடயங்களை பாதிக்காது முறையாக தயாரிக்கப்பட்டுள்ளதுடன், நிதிக்கூற்றுக்கள் உண்மையான மற்றும் நியாயமான கம்பனியின் நிலைமையை 31 மார்ச் 2016 திகதியில் உள்ளவாறு வெளிப்படுத்துவதையும், இலாப மற்றும் காசுப்பாச்சல்கள் சிறிய மற்றும் நடுத்தர நிருவனங்களுக்கான கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக உள்ளமயையும் எமது *கணக்காய்வு உறுதி செய்கின்றது.*

முக்கியமான விடயம்

குறிப்பு 04 இற்கு அமைவாக கம்பனி காணியானது கம்பனி வசம் இல்லை என்பதனை அவதானதுக்கு கொண்டுவருகிறோம்.

ஏனைய சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் தொடர்பான அறிக்கை.

எமது அபிப்பிராயத்துக்கு அமைவாக நிதிக்கூற்றானது 2007 ம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பனிச்சட்டத்தின் பகுதி 151(2) இற்கு அமைவாக பின்வருவனவற்றை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

Krestom MNS & Co.
பட்டய கணக்காளர்கள்
கொழும்பு
4, ஒகஸ்ட், 2016
SDS/ST/bn
SDS lanka Leyland (IFRS) – cd2c9.doc

Lanka Leyland (Pvt) Limitted

உள்ளவாறான ஐந்தொகை

	குறிப்பு	31/03/2016	31/03/2015
		ரூ	ரூ
சொத்துக்கள்			
நீண்டகால சொத்துக்கள்			
ஆதனம், பொறி, உபகரணம்	4	626,473.00	627,869.00
இணைக்கப்பட்ட கம்பனி முதலீடு	5	2,289,017,500.00	1,966,250,000.00
		2,289,643,973.00	1,966,877,869.00
நடைமுறைச் சொத்து			
முதலீடு	6	56,253,591.73	23,819,435.60
வங்கி மீதி	8	4,460,003.85	36,822,867.47
		60,713,595.58	60,642,303.07
மொத்த சொத்துக்கள்		2,350,357,568.58	2,027,520,172.07
மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்			
மூலதனம்			
கூறப்பட்ட மூலதனம்	9	8,958,600.00	8,958,600.00
பொது ஒதுக்கம்	10	9,800,924.00	9,800,924.00
நிறுத்திவைக்கப்பட்ட இலாபம்		2,330,834,664.19	2,008,320,567.31
		2,349,594,188.19	2,027,080,091.31
பொறுப்புக்கள்			
நடைமுறை பொறுப்புக்கள்			
வியாபார மறறும் பிற கொடுப்பனவ	11	64,397.00	55,780.00
வருமானவரி பொறுப்பு	12	698,983.39	384,300.76
		763,380.39	440,080.76
மொத்த மூலதனம் மற்றும் பொறுப்புக்க		2,350,357,568.58	2,027,520,172.07

இந்நிதிக்கூற்றானது 7ம் இலக்க 2007 ம் ஆண்டு கம்பனிச் சட்டத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

....

நிதிக் கட்டுப்பாட்டாளர்

இந்நிதிக்கூற்றானது பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டு பணிப்பாளர் சபைக்காக கையொப்பமிடப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் 1

2

Lanka Leyland (Pvt) Limitted

முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக்கூற்று

	குறிப்பு	31/03/2016 ரூ	31/03/2015 ரூ
வருமானம்			
வட்டி வருமானம்		3,883,244.00	4,296,301.85
கழி- செலவீனம்			
நிலைய நிர்வாக செலவீனம்		(3,045,107.16)	(2,611,253.70)
இணைக்கப்பட்ட கம்பனி சந்தை மதிப்பு (மிகை/குறை)		322,767,500.00	12,100,000.00
வேறு செலவீனம்		(4,231.96)	(3,664.49)
தொழிற்படு இலாபம்/நட்டம்		323,601,404.88	13,781,383.66
நிதி வருமானம்	13	54,450,000.00	6,806,250.00
வரிக்கு முன் இலாபம்/நட்டம்	14	378,051,404.88	20,587,633.66
வரி	15	(1,087,308.00)	(781,927.00)
ஆண்டுக்கன வருமானம்		376,964,096.88	19,805,706.66
ஏனைய பூரணவருமானம்		-	-
ஆண்டுக்கன மொத்த வருமானம்		376,964,096.88	19,805,706.66

இந்த வருமானக்கூற்றுக்கு பக்கம் 7 இல் இருந்து பக்கம் 14 வரையான குறிப்புக்கள் மிகவும் முக்கியமானவையாகும்

Lanka Leyland (Pvt) Limitted

31/03/2014 இல் முடிவடைந்த ஆண்டுக்கான மூலதன அசைவுக்கூற்று

	கூறப்பட்ட மூலதனம் ரூ	பொது ஒதுக்கம் ரூ	றுதிவைக்கப்பட் இலாபம் ரூ	மொத்தம் ரூ
~~**மீள்கூறப்பட்ட மீதி 1/4/2014**~~	~~8,958,600.00~~	~~9,800,924.00~~	~~1,999,514,860.85~~	~~2,018,274,384.85~~
பங்குலாபம்	-	-	(11,000,000.00)	(11,000,000.00)
பங்குதாரர்களுடனான கொடுக்களல் வங்கல்	-	-	(11,000,000.00)	(11,000,000.00)
வருடத்துக்கான இலாபம்	-	-	19,805,706.66	19,805,706.66
ஏனைய பூரண வருமானம்	-	-	-	-
ஆண்டுக்கன மொத்த பூரண வருமானம்	-	-	19,805,706.66	19,805,706.66
மீள் கூறப்பட்ட மீதி 31/03/2015	8,958,600.00	9,800,924.00	2,008,320,567.51	2,027,080,091.51
பங்குலாபம்	-	-	(54,450,000.00)	(54,450,000.00)
பங்குதாரர்களுடனான கொடுக்களல் வாங்கல்	-	-	(54,450,000.00)	(54,450,000.00)
வருடத்துக்கான இலாபம்	-	-	376,964,096.88	376,964,096.88
ஏனைய பூரண வருமானம்	-	-	-	-
ஆண்டுக்கன மொத்த பூரண வருமானம்	-	-	376,964,096.88	376,964,096.88
31/03/2016	8,958,600.00	9,800,924.00	2,330,834,664.39	2,349,594,188.39

இந்த வருமானக்கூற்றுக்கு பக்கம் 7 இல் இருந்து பக்கம் 14 வரையான குறிப்புக்கள் மிகவும் முக்கியமானவையாகும்.

Lanka Leyland (Pvt) Limitted

முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாச்சல் கூற்று

	குறிப்பு	31/03/2016 ரூ	31/03/2015 ரூ
செயற்பாட்டு நடவடிக்கை மூலமான காசுப்பாச்சல்			
வரிக்கு முன்னரான இலாபம்		378,051,404.88	20,587,633.66
சீராக்கங்கள்			
பெறுமானத்தேய்வு	4	1,396.00	3,291.50
வட்டி வருமானம்		(3,883,244.00)	(4,296,301.85)
பங்குலாப வருமானம்	13	(54,450,000.00)	(6,806,250.00)
இணைக்கப்பட்ட கம்பனி சந்தை மதிப்பு (மிகை/குறை)		(322,767,500.00)	(12,100,000.00)
மொத்த சீராக்கங்கள்		(381,099,348.00)	(23,199,260.35)
தொழிற்படு மூலதனம் மீதான மாற்றம்			
வியாபார மற்றும் பிற வருமதிகள்	11	8,617.00	8,485.00
மொத்த தொழிற்படு மூலதனம் மீதான மாற்றம்		8,617.00	8,485.00
செலுத்திய வருமான வரி	12	(772,625.37)	(959,870.88)
பெறப்பட்ட வட்டி		3,883,244.00	4,316,456.18
செயற்பாட்டு நடவடிக்கை மூலமான தேறிய காசுப்பாச்சல்		71,292.51	753,443.61
முதலீட்டு நடவடிக்கை மூலமான காசுப்பாச்சல்			
நிதிச்சொத்துக்களில் முதலீடு(மீள பெறுவன)	6	(32,434,156.13)	32,474,064.16
பெறப்பட்ட பங்குலாபம்	13	54,450,000.00	6,806,250.00
முதலீட்டு நடவடிக்கை மூலமான தேறிய காசுப்பாச்சல்		22,015,843.87	39,280,314.16
நிதி நடவடிக்கை மூலமான காசுப்பாச்சல்			
செலுத்திய பங்குலாபம்		(54,450,000.00)	(11,000,000.00)
நிதி நடவடிக்கை மூலமான தேறிய காசும் தேறிய காசுக்கு சமனானவையும்		(54,450,000.00)	(11,000,000.00)
தேறிய காசும் தேறிய காசுக்கு சமனானவையும்		(32,362,863.62)	29,033,757.77
ஆரம்ப காசும் காசுக்கு சமனானவையும் 1/4/2015	8	36,822,867.47	7,789,109.70
இறுதி காசும் காசுக்கு சமனானவையும் 31/3/2016	8	4,460,003.85	36,822,867.47

இந்த வருமானக்கூற்றுக்கு பக்கம் 7 இல் இருந்து பக்கம் 14 வரையான குறிப்புக்கள் மிகவும் முக்கியமானவையாகும்.

Lanka Leyland (Pvt) Limitted

நிதிக்கூற்று குறிப்புக்கள்

குறிப்பு 1- நிறுவன தகவல்

Lanka Leyland Pvt) Ltd ஆனது ஒரு பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியாக 1938ம் ஆண்டு 51ம் இலக்க கம்பனி கட்டளைச்சட்டத்துக்கு அமைவாக கூட்டினைக்கப்பட்டு, 2007ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிச்சட்டத்தின் கீழ் மீண்டும் பதிவு செய்யப்பட்டதாகும். இது இலங்கையை வதிவிடமாகக்கொன்ட கம்பனியாகும். கம்பனியின் பதிவு செய்யப்பட்ட வதிவிட காரியாலயமும், தலைமை வியாபார ஸ்தாபனமும் இல 80/12, இறப்பர்வத்த , கங்கொடவில, நுகேகொட என்னும் இடத்தில் அமைந்துள்ளது.

திறைசேரி உண்டியல், நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வது Lanka Leyland (Pvt) Ltd இன் பிரதான நடவடிக்கையாகும்.

குறிப்பு - 2 பொதுவானவை மற்றும் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக உள்ளமைக்கன உடன்பாட்டு அறிக்கை.

2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இந்நிதிக்காற்றானது இலங்கை பட்டயக்கணக்காளர் சம்மேளனத்தால் வெளிப்படுத்தப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றாகும்.

பணிப்பாளர்களால் இக்கம்பனியானது தொடர்ந்து இயங்கும் எனவும் எச்சந்தர்ப்பத்திலும் இதன் வியாபார நடவடிக்கைகள் நிறுத்தப்படமாட்டாது எனவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பு 3 கணக்கீட்டு கொள்கைகளின் சுருக்கம்

குறிப்பு 3.1 பொதுவாக கவனிக்க வேண்டியவை

இந்நிதிக்கூற்றை தயாரிப்பதற்கான முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் கீழே சுருக்கமாக விபரிக்கப்பட்டுள்ளது. சிறிய மற்றும் நடுத்தர நிறுவனன்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களை சுவீகரம் செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் தவிர பிரயோகிக்கப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் கடந்த ஆண்டு பயன்படுத்தப்பட்ட கொள்கைகளுக்கு முரணாக அமையவில்லை.

குறிப்பு 3.2 இணைக்கப்பட்ட கம்பனி முதலீடு

இணைக்கப்பட்ட கம்பனி மீது கம்பனியானது கருத்தில் கொள்ளத்தக்க தாக்கம் செலுத்த முடியும். எனினும் அவை சேய் கம்பனியாகவோ கூட்டுக்கம்பனியாகவோ கருதப்பட முடியாதவை. இணைக்கப்பட்ட கம்பனியின் முதலீடானது கிரயத்தில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது பின்பு சந்தைப்பெறுமதியில் மதிப்பீடு செய்யப்படும்.

நிதிக்கூற்று குறிப்புக்கள் தொடர்ச்சி

குறிப்பு 3.3 வருமானம்

வட்டி மற்றும் பங்குலாப வருமானம்

வட்டி வருமானம் காசு அடிப்படையில் கணிப்பீடு செய்யப்படும். பங்குலாபமானது பங்குகாரர்கள் பங்குலாபம் பெறுவதற்கு உரிமை உறுதி செய்யப்படும் போது உருவாகின்றது.

குறிப்பு 3.4 ஆதனம், பொறி, உபகரணம்.

ஆதனம், பொறி, உபகரணம் என்பன கிரயத்திலிருந்து திரண்ட தேய்மானம், திரண்ட பெறுமதி இழ்ப்பு என்பவற்றைக் கழித்த பின் பெறப்பட்டுள்ளது. ஆதனம், பொறி, உபகரணம் என்பனவற்றின் பெறுமானத் தேய்வானது நேர்கோட்டு முறையின்படி கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

சொத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட பொருளாதார பயன்பாட்டுக்காலம் வருமாறு:

சொத்து	**ஆண்டுகள்**
அலுவலக உபகரணம்	4

சொத்தின் பயன்பாட்டு ஆயுட்காலம் மீதிப்பெருமதி என்பன தேவைக்கேற்ப ஒவ்வொரு ஆண்டும் மீளாய்வு செய்யப்படும்.

முக்கியமான ஆய்வு நடவடிக்கைகளின் போது ஏதேனும் கிரயம் ஏற்படின் அக்கிரயம் ஆதனம், பொறி, உபகரணம், என்பவற்றின் தேறக்கூடிய தேறிய பெருமதியில் சேர்த்துக்கொள்ளப்படும்.

குறிப்பு 3.5 ஆதனம்,பொறி, உபகரணம் மற்றும் இணைக்கப்பட்ட கம்பனி முதலீடு மீதான பெறுமதி இழப்பு பரிசோதனை.

சொத்துக்கள் மீதான பெறுமதி இழப்பு பரிசோதனை மேற்கொள்வதற்காக சொத்துக்கள் அவற்றின் சுயாதீனமான காசு பாச்சலை உருவாக்கக்கூடிய அடிப்படையில் குளுமப்படுத்தப்பட்டுள்ளது(உருவாக்கக்கூடிய அலகுகள்). இதனால் சில சொத்துக்கள் மீது தனித்தனியாக பெறுமதி இழப்பு பரிசோதனையும் சில சொத்துக்கள் மீது காசு உருவாக்கக்கூடிய அலகுகள் என்ற அடிப்படையிலும் பெறுமதி இழப்பு செய்யப்பட்டுள்ளது. நன்மதிப்பானது வியாபாரக்கூட்டமைப்பால் ஒருங்கிணைக்கப்பட்ட நன்மை காசு உருவாக்கக்கூடிய அலகுகள் மீது ஒதுக்கப்பட்டுள்ளது.

ஏதேனும் நிகழ்வுகள் அல்லது நிகழ்வுகளில் மாற்றங்கள் சொத்தின் தேறிய பெறுமதி மீட்கக்கூடியமையை போதும் தனிப்பட்ட சொத்துக்கள் அல்லது காசு உருவாக்கக்கூடிய அலகுகள் மீது பெறுமதி இழப்பு பரிசோதனை செய்யப்படும்.

சொத்துக்கள் அல்லது காசு உருவாக்கக்கூடிய தேறிய பெறுமதியானது அதன் மீட்கக்கூடிய பெறுமதியில் அதிகமாக இருக்கும் போது அவ்வித்தியாசமானது பெறுமதி இழப்பு அட்டமாக வருமானக்கூற்றில் பிரதிபலிக்கப்படும்.

காசு உருவாக்கக்கூடிய அலகுகள் மீதான பெறுமதி இழப்பு நட்டமானது முதலில் அக் காசு உருவாக்கக்கூடிய அலகுகள் மீது ஒதுக்கப்பட்ட நன்மதிப்பில் இருந்து கழித்துக்காட்டப்படும். மேலதிக நட்டமானது அக்காசு உறுவாக்கக்கூடிய அலகுகளின் ஏனைய சொத்துக்களில் இருந்து விகிதாசார அடிப்படையில் கழித்துக்காட்டப்படும் நன்மதிப்பு தவிர ஏனைய சொத்துக்கள் முன்னர் செய்யப்பட்ட பெறுமதி இழப்பு நட்டம் தொடர்கின்றதா என்று மீள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும். அவ்வாறு இருப்பின் அது வருமானக்கூற்றில் சீராக்கப்படும்.

நிதிக்கூற்று குறிப்புக்கள் தொடர்ச்சி

குறிப்பு 3.6 நிதிக்கருவிகள்
நிதிச்சொத்துக்கள்
காசும் காசுக்குச் சமனானவையும்

இன் நிதிச்சொத்துக்கள் ஆரம்பத்தில் அவற்றின் கொடுக்கல் வாங்கல் பெறுமதியில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஏனைய குறுங்கால நிதிச்சொத்துக்கள்
ஏனைய குறுங்கால நிதிச்சொத்துக்கள் என்பது நிலையான வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியலை குறிக்கின்றது.
இன் நிதிச்சொத்துக்கள் ஆரம்பத்தில் அவற்றின் கொடுக்கல் வாங்கல் பெற்மதியில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பின்னர் அவை செயல் திறை வட்டி முறையில் அவற்றின் குறைந்துகொண்டுவரும் மதிப்பு முறையில் கணிக்கப்பட்டுள்ளது.

நிதிப்பொறுப்புக்கள்
கம்பனியின் நிதிப்பொறுப்புக்கள் வியாபார மற்றும் ஏனைய பொறுப்புக்களைக் கறிக்கும். இன் நதி பொறுப்புக்கள் ஆரம்பத்தில் அவாற்றின் கொடுக்கல் வாங்கல் பெறுமதியில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பின்னர் அவை செயல்திறன் வட்டி முறையில் அவற்றின் குறைந்துகொண்டு வரும் மதிப்பு முறையில் கணிக்கப்பட்டுள்ளது. வியாபார கொடுப்பனவுகள் அவற்றின் சாதாரண கடன் கொடுக்கல் வாங்கல் தவனை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன, மற்றும் வட்டி அற்றவையாகும்.

குறிப்பு 3.7 வருமான வரி

வருமானக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ள வருமான வரியானது நடப்பு ஆண்டுக்கானதும் ஏனைய பூரண வருமானத்திலோ அல்லது மூலதனத்திலோ உள்ளடங்காததும் ஆகும்.

நடப்பு வருமான வரி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களானது இந்த அல்லது கடந்து சென்ற ஆண்டுகளிற்காக வருமான வரி திணைக்களத்துடனான கட்டுப்பாடுகள் அல்லது கோரிக்கைகள் நிதிக்கூற்று வெளிப்படுத்திய திகதியில் செலுத்தப்படாது இருப்பின் அதனை குறிக்கும். நடப்பாண்டுக்குரிய வரியானது வரிக்குரிய இலாபத்தில் செலுத்தப்படும், இது வருமானக்கூற்றில் பிரதிபலிக்கப்பட்ட இலாபதில் இருந்து வேறுபட்டதாகும்.

குறிப்பு 3.8 மூலதனம்,ஒதுக்கம் மற்றும் செலுத்திய பங்குலாபம்.

கூறப்பட்ட மூலதனமானது கம்பனிக்கு செலுத்தவேண்டியவை மற்றும் கம்பனியினால் பெறப்பட வேண்டியவை என்பன உள்ளடங்கும்.
பங்குதாரர்கள் அவ்வப்பொது பிரசுரிக்கப்படும் பங்குலாபங்களை பெற உரித்தானவர்கள். கம்பனியின் வாக்குரிமையானது ஒரு பங்கிற்கு ஒரு வாக்கு மூலம் வழங்கப்படும். அத்தனை பங்குகளுக்கும் தேறிய சொத்தில் சம பங்கு உடமையாகும்.

நிதிக்கூற்று குறிப்புக்கள் தொடர்ச்சி

குறிப்பு 3.9 தொழிலுக்கு பின்னரான நன்மைகள் மற்றும் குறுங்கால தொழில் ரீதியான நன்மைகள்.

தொழிலுக்குப்பின்னரான நன்மைகள்.

கம்பனியானது பல்வேறு வரையறுத்த பங்களிப்பு திட்டங்கள் மூலமாக தொழிலுக்கு பின்னரான நன்மைகளை வழங்குகின்றது.

வரையறுத்த பங்களிப்புதிட்டம்

வரையறுத்த பங்களிப்புதிட்டம் என்பது ஒரு தொழிலுக்கு பின்னரான நன்மையாக வழங்கும். இத்திட்டத்திற்கு கம்பனி ஒரு நிலையான கொடுப்பனவை வேறு ஒரு நிருவனத்திற்கு வழங்குவதன் மூலம் வேறு பிற கொடுப்பனவுகளை சட்ட அல்லது உடன்படிக்கைகளின் கீழ் செலுத்துவதற்கான பொறுப்பிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்கிறது. அணைத்து ஊழியர்களும் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி என்பனவற்றிற்கு தகுதியுடையவர்களாகின்றனர். இப்பங்களிப்பு வருமானக்கூற்றில் செலவீனமாக காட்டப்படும்.

கம்பனியானது ஊழியர் சேமலாப நிதிக்காக 12% மும் ஊழியர் நம்பிக்கை நிதிக்காக 3% மும் ஊழியர்களின் சம்பளத்தில் பங்களிப்பு செய்கின்றது.

குறுங்கால தொழில் ரீதியான நன்மைகள்

குறுங்கால தொழில் ரீதியான நன்மைகள் என்பது நடைமுறை பொறுப்புக்களில் அட்டுறு செலவீனமாக வெளிப்படுத்தப்பட்டு கழிவீடு செய்யப்படாத பெறுமதியில் காட்டப்பட்டுள்ள கம்பனி செலுத்த எதிர் பார்த்துள்ளவையாகும்.

குறிப்பு 3.10 கணக்கீட்டு கொள்கை மற்றும் நிச்சயமற்றவைக்கான மதிப்பீடு என்பவற்றில் உபயோகிக்கப்பட்ட முக்கிய முகாமைத்துவ தீர்மானங்கள்.

இவ் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும்போது முகாமையானது அவ்வாண்டிற்கான வருமான்ம், செலவீனங்கள், சொத்துக்கள்,பொறுப்புக்கள், எதிர்பாராத பொறுப்புக்கள் வெளிப்படுத்தல்கள் என்பவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தும் என கருதும் மதிப்பீடுகள், எடுகோள்கள், எதிர்வுகூறல்கள் என்பவற்றை கருத்தில் கொள்ள வேண்டும்.

முக்கிய முகாமைத்துவ தீர்மானங்கள்

கீழே குறிப்பிடப்பட்டவை நிதிக்கூற்றுக்களில் முக்கிய தாக்கம் செலுத்தக்கூடிய கம்பனியின் கணக்கீட்டு கொள்கைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள முக்கிய முகாமைத்துவ தீர்மானங்கள் ஆகும்.

நிச்சயமற்ற மதிப்பீடு

தேறிய சொத்துக்கள், பொறுப்புக்களின் பெறுமதியானது முன்னய அனுபவம், பல்வேறுபட்ட பொறுத்தமான தகவல்கள் என்பவற்றை கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்டது. சில வேளைகளில் உண்மையான தகவல்கள் இவ்வாரான மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள் என்பவற்றிலிருந்து வேறுபடும்.

பெறுமதி இழப்பு

பெறுமதி இழப்பு பரிசோதனை செய்யும்போது, முகாமையானது சொத்து அல்லது காசு உறுவாக்கக்கூடிய அலகுகள் மீதான மீட்க கூடிய பெறுமதியை எதிர்பார்க்க கூடிய சுயாதீன காசுப்பாச்சல்களை பொருத்தமான

நிதிக்கூற்று குறிப்புக்கள் தொடர்ச்சி

வட்டிவீததில் கழிவு செய்வதன் மூலம் பெற்றுக்கொள்கினறது. நிச்சயமற்றவைக்கான மதிப்பீடு என்பது எதிர்கால தொழிற்பாட்டு பெறுபேறு மற்றும் பொறுத்தமான வட்டி வீதம் தொடர்பானவை ஆகும்.

பெறுமானத்தேய்வடையக்கூடிய சொத்துக்களின் பயன்பாடு காலம்.

சொத்தின் பயன்பாட்டு ஆயுட்காலம் தேவைக்கேற்ப ஒவ்வொரு ஆண்டும் மீளாய்வு செய்யப்படும். இம் மதிப்பீடுகளின் நிச்சயமற்ற தன்மை என்பது மென்பொருள் தகவல் தொழில்நுட்ப உபகரணங்களின் தொழில்நுட்ப பழமையடைதல் சார்ந்ததாகும்.

Lanka Leyland (Pvt) Limitted

நிதிக்கூற்று குறிப்புக்கள் தொடர்ச்சி

குறிப்பு 4 - ஆதனம், பொறி, உபகரணம்

	நிலம்	அலுவலக உபகரணம்	மொத்தம்
	ரூ	ரூ	ரூ
மொத்த தேறிய பெறுமதி			
மீதி 01 ஏப்ரல் 2014	626,473.00	13,166.00	639,639.00
மீதி 31 மார்ச் 2015	626,473.00	13,166.00	639,639.00

பெறுமானத்தேய்வு மற்றும் பெறுமதி இழப்பு

	நிலம்	அலுவலக உபகரணம்	மொத்தம்
	ரூ	ரூ	ரூ
மீதி 01 ஏப்ரல் 2015	-	11,770.00	11,770.00
ஆண்டிற்குரிய பெறுமானத்தேய்வு	-	1,396.00	1,396.00
மீதி 31 மார்ச் 2016	-	13,166.00	13,166.00
தேறிய பெறுமதி 31 மார்ச் 2016	626,473.00	-	626,473.00

இந்த காணியின் உடமை தற்பொது கம்பனியின்வசம் இல்லை

குறிப்பு 5 இணைக்கப்பட்ட கம்பனி முதலீடு

சந்தைப்பெறுட முறை	பங்குகளின் எண்ணிக்கை	உட்மை 2015 %	2014 %	31/03/2016 ரூ	31/3/2015 ரூ
lanka leyland (pvt)	1,512,500	42%	42%	2,289,017,500.00	1,966,250,000.00
				2,289,017,500.00	1,966,250,000.00

இணைக்கப்பட்ட கம்பனியிலிருந்து பெறப்பட்ட பங்குலாபம் (இது நிதி வருமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது)	54,450,000.00	6,806,250.00

Lanka Leyland (Pvt) Limitted

நிதிக்கூற்று குறிப்புக்கள் தொடர்ச்சி

குறிப்பு 6 முதலீடு

	31/03/2016 ரூ	31/3/2015 ரூ
நிலையான வைப்பு		
- மக்கள் வங்கி	2,500,000.00	-
- தேசிய சேமிப்பு வங்கி	1,150,000.00	21,156,133.00
திறைசேரி உண்டியல்கள்		
- இலங்கை வங்கி	2,603,591.73	2,663,302.00
- மக்கள் வங்கி	30,000,000.00	-
- தேசிய சேமிப்பு வங்கி	20,000,000.00	-
	56,253,591.73	23,819,435.00

குறிப்பு 7 நிதிச்சொத்துக்கள் மற்றும் நிதிப்பொறுப்புக்கள்

நிதிச்சொத்துக்கள்

குறைந்துகொண்டுவரும் மதிப்பு பெறுமதியில் இருந்து பெறுமதி இழப்பு கழித்து மதிப்பிடப்பட்ட நிதிச்சொத்துக்கள்.

	31/03/2016 ரூ	31/3/2015 ரூ
முதலீட்டுகள் (குறிப்பு 6)	56,253,591.73	23,819,435.60
வங்கி மீதி (குறிப்பு 8)	4,460,003.85	36,822,867.47
மொத்தம்	60,713,595.58	60,642,303.07

நிதிப்பொறுப்புக்கள்

குறைந்துகொண்டுவரும் மதிப்பு பெறுமதியில் மதிப்பிடப்பட்ட நிதிப்பொறுப்புக்கள்

ஏனைய கொடுப்பனவுகள் - அட்டுறு செலவீனங்கள் (குறிப்பு 11)	64,147.00	55,780.00
மொத்தம்	64,147.00	55,780.00

குறிப்பு 8 காசும் காசுக்குச்சமனானவையும்

வங்கி மீதி	4,460,003.85	36,822,867.47
	4,460,003.85	36,822,867.47

குறிப்பு 9 கூறப்பட்ட மூலதனம்
கூறப்பட்ட மூலதனம் என்பது முழுவதுமாக செலுத்தப்பட்டவையாகும்.

பங்குதாரர்கள் அவ்வப்பொது பிரசுரிக்கப்படும் பங்குலாபங்களை பெற உரித்தானவர்கள். கம்பனியின் வாக்குரிமையானது ஒரு பங்கிற்கு ஒரு வாக்கு மூலம் வழங்கப்படும். அத்தனை பங்குகளுக்கும் தேறிய சொத்தில் சம பங்கு உடமையாகும்.

வழங்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை மற்றும் முழுவதுமாக செலுத்தப்பட்டவை

	31/03/2016	31/3/2015
மீதி 1 ஏப்ரல்	2150000	2150000
மீதி 31 மார்ச்	2150000	2150000

	31/03/2016 ரூ	31/3/2015 ரூ
கூறப்பட்ட மூலதனம்		
கூறப்பட்ட மூலதனம்	15,750,000.00	15,750,000.00
(-) அழைப்பு நிலுவை	(6,791,400.00)	(6,791,400.00)
மீதி 1 ஏப்ரல்	8,958,600.00	8,958,600.00
மீதி 31 மார்ச்	8,958,600.00	8,958,600.00

குறிப்பு 10 பொது ஒதுக்கம்

மீதி 1 ஏப்ரல்	9,800,924.00	9,800,924.00
மீதி 31 மார்ச்	9,800,924.00	9,800,924.00

பொது ஒதுக்கம் என்பது பொது விண்ணப்பங்களுக்காக பணிப்பாளர்களால் ஒதுக்கப்பட்ட தொகையாகும்.

குறிப்பு 11 வியாபார மற்றும் பிற கொடுப்பனவுகள்

நிதிப்பொறுப்புக்கள்		
அட்டுறு செலவீனம்	64,147.00	55,780.00
நிதியல்லா பொறுப்புக்கள்		
அட்டுறு செலவீனம்	250.00	-
	64,397.00	55,780.00

குறிப்பு 12 வருமான வரி பொறுப்பு

மீதி 1 ஏப்ரல்	384,300.76	562,244.64
ஆண்டுக்கான ஏற்பாடு	1,087,308.00	781,927.00
	1,471,608.76	1,344,171.64
இவ்வாண்டிற்கான கொடுப்பனவு	(384,301.00)	(562,244.00)
கருத்திலான வரிச்சலுகை	(381,824.37)	(19,316.88)
பிடித்து வைக்கும் வரி	(6,500.00)	(378,310.00)
31 மார்ச் மீதி	698,983.39	384,300.76

குறிப்பு 13 நிதி வருமானம்

பங்குலாப வருமானம்(இணைக்கப்பட்ட கம்பனி)	54,450,000.00	6,806,250.00
நிதி வருமானம்	54,450,000.00	6,806,250.00

நிதிக்கூற்று குறிப்புக்கள் தொடர்ச்சி

குறிப்பு 14 வரிக்குமுன் இலாபம்
பின்வரும் செலவீனங்கள் கழித்தபின்

	31/03/2016	31/3/2015
	ரு	ரு
பணிப்பாளர் உதவுதொகை	322,500.00	600,000.00
பணிப்பாளர் வேதனம்	825,000.00	225,500.00
கணக்காய்வாளர் கட்டணம்	64,147.00	55,780.00
கணக்காய்வாளர் ஏற்பாடு		1,210.00
ஊழியர் கிரயம்	524,200.00	458,000.00
வரையறுத்த உதவும் திட்டம்	228,150.00	190,800.00
பெறுமானத்தேய்வு	1,396.00	3,291.50

குறிப்பு 15 வரி

15.1 10ம் இல 2006 ஆம் ஆண்டு வருமான வரிச்சட்டத்திற்க்கமைவாக கம்பனி 28% அதன் வரிக்குறிய வருமானத்தில் செலுத்தவேண்டும்.

	31/03/2016	31/3/2015
	ரு	ரு
நடப்பு ஆண்டு இலாபத்துக்கான வரி	1,087,308.00	781,927.00
	1,087,308.00	781,927.00

15.2 வரிச்செலவீனங்களுக்கும் கணக்கீட்டு இலாபத்துக்குமான இணக்கப்பாடு

வரிசெலுத்துவதற்கான கணக்கீட்டு இலாபம்	378,051,405.00	20,587,634.00
செலுத்தவேண்டிய இலாபத்தின் வரிவிளைவு	105,854,393.00	5,764,538.00
செலுத்த தேவையில்லாத இலாபத்தின் வரி விளைவு	(105,620,900.00)	(5,293,750.00)
கழிக்க முடியாத செலவீனங்களின் வரி விளைவு	79,968.00	80,022.00
வருமான வரி ஏற்பாட்டு மிகை	-	(700.00)
வருமான வரி ஏற்பாட்டு நட்டம்	773,847.00	231,817.00
	1,087,308.00	781,927.00

15.3 கருத்தில் கொள்ளக்கூடிய தற்காலிக வேறுபாடுகள் இல்லாமையால் பிற்போடப்பட்ட வரி ஏற்பாடு செய்யப்படவில்லை

16 ஐந்தொகை திகதிக்குப்பின்னரான நிகழ்வுகள்

ஐந்தொகை திகதிக்குப்பின்னரான நிகழ்வுகளுக்கு திருத்தங்கள் செய்வதற்கு எது விதமான சந்தர்ப்பங்களும் ஏற்படவில்லை.

குறிப்பு 17 தொடர்புபட்ட குழுவினர்களின் மத்தியிலான கொடுக்கல வாங்கல்கள்.

17.1 முக்கியமான முகாமை பணிப்பாளர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் முக்கியமான முகாமை பணிப்பாளர்கள் குறிப்பது கம்பனியின் பணிப்பாளர்சபை உறுப்பினர்களை.

முடிவடைந்த ஆண்டிற்கான

	31/03/2016	31/3/2015
	ரு	ரு
குறுங்கால ஊழியர் நன்மை	1,147,500.00	825,500.00

குறிப்பு 18 எதிர்பாராத பொறுப்புக்கள் மற்றும் சொத்துக்கள்

31 மார்ச் 2016 முடிவடைந்த ஆண்டுக்காக நிதிக்கூற்றுக்களில் எதுவிதமான எதிர்பாராத பொறுப்புக்கள் மற்றும் சொத்துக்கள் தொடர்பாக திருத்தங்கள் செய்யப்பட வேண்டியதில்லை.